# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

12 - ஆம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

காலம் : 1.30 மணி | மதிப்பெண்கள் : 45

**I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.** 10 X 1 = 10

1. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும்போது, அதன் எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
   அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள்
   இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்
2. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
   அ) பெயரளவுக் கணக்கு ஆ) சொத்து கணக்கு
   இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
3. தொடக்க முதல் ரூ. 10,000 அவ்வாண்டின் எடுப்புகள் ரூ. 6,000, அவ்வாண்டின் இலாபம் ரூ. 2,000 மற்றும் கொண்டுவந்த கூடுதல் முதல் ரூ. 3000 எனில் இறுதி முதல் காணவும்.
   அ) ரூ. 9,000 ஆ) ரூ. 11,000 இ) ரூ. 21,000 ஈ) ரூ. 3,000
4. உயில்கொடை ஒரு
   அ) வருவாயினச் செலவு ஆ) முதலினச் செலவு
   இ) வருவாயின வரவு ஈ) முதலின வரவு
5. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
   அ) சம்பளம் ஆ) கழிவு இ) கடன் மீது வட்டி ஈ) முதல் மீது வட்டி
6. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
   இ) பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு கணக்கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
7. நிலை அறிக்கை ஒரு
   அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை
   ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு
   ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு
8. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
   அ) இலாபம் அல்லது நட்டம் ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
   இ) உபரி அல்லது பற்றாக்குறை ஈ) நிதிநிலை
9. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்
   அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்
10. பின்வருவனவற்றில் எது இலாபநட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்?
    அ) அலுவலகச் செலவுகள் ஆ) பணியாளர் ஊதியம்
    இ) கூட்டாளியின் ஊதியம் ஈ) வங்கிக்கடன் மீதான வட்டி

**II ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 4 X 2 = 8

11. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தருக.
12. நிலை அறிக்கை என்றால் என்ன?
13. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.
14. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?



www.Padasalai.Net
CamScanner

15. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் கண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 31.3.2019 அன்று இறுதி முதல் | 1,00,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 60,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | 40,000 |
| 1.4.2018 அன்று தொடக்க முதல் | ? |
| 31.3.2019 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நட்டம் | 40,000 |

16. பின்வரும் விவரங்களிலிருந்து 2018 மார்ச் 31-ஆம் நாளோடு முடிவடையம் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டிய அச்சு மற்றும் எழுதுபொருள் செலவைக் கணக்கிட்டு அவை 2018 மார்ச் 31-ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பில் எவ்வாறு தோன்றும் என்பதையும் குறிப்பிடவும்.

| | ரூ. |
|---|---|
| எழுதுபொருள்களுக்காக கொடுத்த தொகை (2017-2018) | 2500 |
| எழுதுபொருள்கள் இருப்பு (ஏப்ரல், 1,2017) | 300 |
| எழுதுபொருள்கள் இருப்பு (மார்ச் 31, 2018) | 200 |

**III ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 4 X 3 = 12

17. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்குக் வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

18. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.

19. சாந்தி என்பவரின் 2018 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புகள் பின்வருமாறு.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 6000 | பற்பல கடனீந்தோர் | 25000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | 4000 | சரக்கிருப்பு | 55000 |
| இயந்திரம் | 60000 | கடனாளிகள் | 60000 |
| அறைகலன் | 10000 | ரொக்கம் | 4000 |

2018 டிசம்பர் 31-ம் நாளைய நிலை அறிக்கை தயார் செய்யவும்.

20. தமிழ் கல்வியியல் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019 மார்ச்ச 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.4.2018) | 18000 | கட்டடம் வாங்கியது | 210000 |
| வாடகை செலுத்தியது | 6000 | பணியாளர் சம்பளம் | 55000 |
| உதவித்தொகை அளித்தது | 15200 | சந்தா பெற்றது | 265500 |
| நுழைவுக் கட்டணம் பெற்றது | 18000 | | |

www.Padasalai.Net



CamScanner

21. பின்வரும் விவரங்கள் ஒரு சங்கத்தின் 2017-2018 ஆம் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

| விவரம் | ரூ. |
|---|---|
| 1.4.2017 ம் அன்று பரிசு நிதி | 60000 |
| 1.4.2017 அன்று பரிசு நிதி முதலீடு | 60000 |
| பரிசு நிதி முதலீடு மீதான வட்டிப் பெற்றது | 6000 |
| பரிசுகள் வழங்கியது | 8000 |
| பரிசு நிதிக்கா நன்கொடைப் பெற்றது | 12000 |

22. சந்தோஷ் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடப்படவேண்டும். டிசம்பர் 11 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டி ல் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு

| நாள் | ரூ. |
|---|---|
| பிப்ரவரி 1 | 2000 |
| மே 1 | 10000 |
| ஜூலை 1 | 4000 |
| அக்டோபர் 1 | 6000 |

எடுப்பு மீது வட்டித் தொகையைக் கணக்கிடவும்.

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 X 5 = 15

23. அ) நிலை முதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும். ***(அல்லது)***

ஆ) வேலூர் பொழுதுபோக்கு மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2017 மார்ச் 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.4.2016) | 3,000 | கேளிக்கை வரவுகள் | 20,00 |
| தொடக்க வங்கி இருப்பு (1.4.2016) | 12,000 | சேர்க்கைக் கட்டணம் பெற்றது | 1,000 |
| அறைகலன் வாங்கியது | 11,000 | நகாட்சி வரி | 22,000 |
| விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 11,000 | அறக்கொடை நாடகக்காட்சி செலவுகள் | 2,000 |
| விளையாட்டு அரங்கத்திற்கு பெற்ற நன்கொடை | 8,000 | பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது | 15,000 |
| பழைய டென்னிஸ் பந்துகள் விற்றது | 1,500 | புதிய டென்னிஸ் மைதானம் கட்டியது | 18,000 |
| செய்தித்தாள்கள் வாங்கியது | 500 | அறக்கொடை நாடகக்காட்சி வரவுகள் | 2,500 |
| பயணச் செலவுகள் | 4,500 | இறுதி கைரொக்க இருப்பு | 8,000 |

www.Padasalai.Net



CamScanner

24. அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையை கணக்கிடவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2017 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,50,000 |
| 2017 ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சட்டு | 40,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 3,90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்குரிய ரொக்கம் பெற்றது | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 10,000 |
| விற்பனைத் திருப்பம் | 40,000 |
| 2018, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 30,000 |
| 2018, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 1,30,000 |
| ரொக்க விற்பனை | 2,00,000 |

அ) கீழ்க்காணும் ஈரோடு மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு கைரொக்கம் | 11,000 | அறைகலன் வாங்கியது | 10,000 |
| பங்காதாயம் பெற்றது | 27,600 | வாடகை | 2,800 |
| பழைய செய்தித்தாள் விற்றது | 3,000 | செயலர் மதிப்பூதியம் | 15,000 |
| உறுப்பினர் சந்தா | 31,000 | தபால் செலவுகள் | 1,700 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | 8,000 | பொதுச் செலவுகள் | 4,350 |
| முதலீடுகள் மீதான வட்டி | 1,250 | அச்சு மற்றும் எழுதுபொருள்கள் | 45,000 |
| அறைகலன் விற்றது | 5,000 | தணிக்கைக் கட்டணம் | 5,000 |
| (ஏட்டு மதிப்பு ரூ. 4,400) | | இறுதி இருப்பு கை ரொக்கம் | 3,000 |
| | 86,850 | | 86,850 |

25. அ) கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது. இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932-ன் படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறுகுறிப்பு தரவும். (அல்லது)

ஆ) முறையான கணக்கேடுகளைப் பராமரிப்பதில்லை. 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | 1.4.2017 ரூ. | 31.3.2018 ரூ. |
|---|---|---|
| வங்கி இருப்பு | 14,000 (வ) | 18,000 (ப) |
| கைரொக்கம் | 800 | 1,500 |
| சரக்கிருப்பு | 12,000 | 16,000 |
| கடனாளிகள் | 34,000 | 30,000 |
| பொறித்தொகுதி | 80,000 | 80,000 |
| அறைகலன் | 40,000 | 40,000 |
| கடனீந்தோர் | 60,000 | 72,000 |

கண்ணன் தனது சொந்தப் பயனுக்காக ரூ. 40,000, எடுத்துக்கொண்டார். தன்னுடைய வியாபரத்தை விரிவுபடுத்துவதற்காக அவர் ரூ. 16,000 கூடுதல் முதல் கொண்டுவந்தார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்க வேண்டும். பொறித்தொகுதி மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.



www.Padasalai.Net
CS CamScanner